# INDIAN SCHOOL AL WADI AL KABIR
# MIDTERM EXAMINATION
## TAMIL (2nd LANGUAGE)

Class: VII — Max. Marks: 80

Date: 20/09/2026 — Time: 2½ Hours

**General Instructions:**

1. Please check that this question paper contains 4 printed pages and 17 questions.

**1. பொருள் தருக. (6X1=6)**

a. ஆக்கம் செல்வம்
b. விடுதி- தங்கும் இடம்
c. அச்சம் – பயம்
d. நெறி - வழி
e. பொழிகிற – தருகின்ற
f. கொம்பு - கிளை

**2. எதிர்ச்சொல் தருக. (3x1=3)**

a. தீமை x நன்மை
b. வலியார் x மெலியார்
c. இயற்றல் x அழித்தல்

**3. பிரித்து எழுதுக. (5X1=5)**

a. பூத்து + இருக்கும்
b. நிறம்+ கொண்ட
c. குரல்+ ஆகும்
d. மரம் + கொம்பு
e. அருள் + செல்வம்

**4. சேர்த்து எழுதுக. (6X1=6)**

a. கிழங்கெடுக்கும்
b. நரியெலாம்
c. தடையிருக்கும்
d. வானொலி
e. யாதெனில்
f. தீதுண்டோ

**5. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6x1=6)**

a. நாமக்கல் கவிஞர், காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர்.

1. பாரதியார்
2. பாரதிதாசன்
3. **வெ. இராமலிங்கனார்**
4. கவிமணி

b. __________ உடைய செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

1. மன்னன்
2. **பொறாமை இல்லாதவன்**
3. பொறாமை உள்ளவன்
4. செல்வந்தன்

c. வாய்மை எனப்படுவது____________

1. அன்பாக பேசுதல்

2. **தீங்கு தராத சொற்களையைப் பேசுதல்**

3. தமிழில் பேசுதல்

4. சத்தமாக பேசுதல்

d. நாமக்கல் கவிஞரை, ''பலே பாண்டியா, பிள்ளை, நீர் ஒரு புலவன் என்பதில் ஐயமில்லை'' என்று பாராட்டியவர்___________

1. சுரதா **2. பாரதியார்**

3. பாரதிதாசன் 4. கவிமணி

e. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறட்பாக்கள் உள்ளன.

**1. 1330** 2. 1333 3. 1343 4. 1130

f. தன் குற்றம் காண்பவருடைய வாழ்வில் __________ இல்லை.

**1. துன்பம்** 2. செல்வம் 3. பணம் 4. மகிழ்ச்சி

**6. நிரப்புக. (6x1=6)**

a. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் **<u>வெ. இராமலிங்கனார்.</u>**

b. எங்கள் தமிழ்மொழி **<u>தேன்</u>** போன்ற மொழியாகும்.

c. **<u>அருளாகிய</u>** செல்வமே செல்வங்களும் சிறந்த செல்வமாகும்.

d. கவிஞர் சுரதாவின் இயற்பெயர் **<u>இராசகோபாலன்</u>**.

e. காட்டின் வளமே **<u>நாட்டின் வளம்</u>** என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

f. **<u>தமிழ்மொழி</u>** நம் அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும்.

**7. பாடலை நிறைவு செய்க. (4)**

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

**8. திருக்குறளை அடி பிறழாமல் எழுதவும். (2x2=4)**

a. 'ஏதிலார்' - எனத் தொடங்கும் குறள்.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

b. 'அரசு' - என முடியும் குறள்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

**9. நான்கெழுத்துச் சொற்கள் ஏதேனும் நான்கினை எழுதுக. (2)**

ஏதிலார், அச்சம், கவிமணி , செல்வம்

**10. விடுபட்ட திருக்குறளை எழுதுக. (2)**

[யாதெனின், வாய்மை, இலாத]

a. **வாய்மை** எனப்படுவது **யாதெனின்** யாதொன்றும்
தீமை **இலாத** சொலல்.

**11. சரியான பகுபத உறுப்பை எழுதுக. (5)**

a. நடக்கின்றான்= நட + க் + கின்று + ஆன்

b. பதிந்து= பதி + த்(ந்) + த்+உ

c. பார்த்தான் = பார் + த் + த் +ஆன்

d. ஆடினார் =ஆடு + இன் + ஆர்

e. ஓடின= ஓடு+ இன்+ அ

**12. சரியான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (2)**

[தலைவன், கொடு, இறைச்சி, அம்பு, மதகு, நீர், பசு, ஒழுக்கம், பூமி]

a. ஏ - அம்பு

b. ஐ - தலைவன்

c. ஆ- பசு

d. கூ- பூமி

**13. [கு டு து று] ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் ஏதேனும் இரண்டு சொற்களை எழுதுக. (4)**

கு – பாகு, வாகு

டு – பாடு, சாடு, ஓடு, விடு, ஆடு

து – வாது, கேது, சாது, மாது, காது

று – வறு, சேறு, சோறு

**14. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி. (5x1=5)**

a. நாமக்கல் கவிஞரின் பன்முகத்தன்மையினை எழுதுக.

தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர்.

b. தமிழின் சிறப்புகள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

உலக மொழிகளில் தொன்மையானது தமிழ்மொழி.

மென்மையும், இனிமையும், வளமையும் உடையது.

c. பதத்தின் இருவகைகள் யாவை?

பகுபதம், பகாப்பதம் என பதம் இருவகைப்படும்.

d. காட்டுப் பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகின்றார்?

காட்டுப் பூக்களுக்கு கார்த்திகை விளக்குகளை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

e. சுரதாவின் படைப்புகள் யாவை?

தேன்மழை, துறைமுகம், அமுதம் தேனும்.

**15. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. (6x2=12)**

a. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

பகுபத உறுப்புகள் ஆறு. அவை: பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

b. சிறந்த அரசின் செயல் யாது?

பொருள் வரும் வழிகளை அறிதல்

பொருள்களைச் சேர்த்தல்

பொருளைப் பாதுகாத்தல்

காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதல்.

c. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

அருள் வழிகள் நிரம்பிய மொழி. அறிவைத் தரும் மொழி. அஃது அச்சத்தை போக்கி இன்பம் தரும்.

d. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?

தேன் இனிமையானது; தூய்மையானது; சுவைமிக்கது; இன்பம் கொடுப்பது. அதைப் போல இன்பம் கொடுப்பது தமிழ் எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

e. பெயர்ப் பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும். அவை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில்.

f. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?

உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

g. சுரதாவின் இயற்பெயர் என்ன? அவர் எங்கு எப்போது பிறந்தார்?

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். அவர் பழையனூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1921 ஆம் வருடம் பிறந்தார்.

h. காட்டின் பயன்களாக கவிஞர் சுரதா கூறுவன யாவை?

காட்டில் உள்ள மலர்களைக் காணும் போது கண்கள் குளிர்ச்சி பெறும். காடுகள் மரம், தேன், மருந்து முதலிய பொருள்களைத் தரும். மேலும் கனிகள் தரும். குளிர்ந்த நிழல் தரும்.

**16. ‘காடு’ என்ற பாடல் வரிகளை நிறைவு செய்க. (4)**

**சிங்கம் புலிகரடி**
**சிறுத்தை விலங்கினங்கள்**
**எங்கும் திரியுமடீ – கிளியே**
**இயற்கை விடுதியிலே!**

**17. பாடலில் இடம்பெறும் ‘எதுகை’, ‘மோனை’ சொற்களை எடுத்து எழுதுக.** **(4)**

a. அருள் நெறி அறிவைத் தரலாகும்

அதுவே தமிழன் குரலாகும்

பொருள்பெற யாரையும் புகழாது

போற்றா தாரையும் இகழாது

| | | | |
|---|---|---|---|
| **எதுகை:** | தரலாகும் | யாரையும் | புகழாது |
| | குரலாகும் | தாரையும் | இகழாது |
| **மோனை :** | அருள் | | |
| | அதுவே | | |

***